4th November 1966]

சொன்னார்கள். லைசென்ஸ் பெறாத தறிகளுக்கு மின்சார இணைப்புக் கொடுக்கக் கூடாது என்று மத்திய சர்க்கார் சட்டம் ஏற்கனவே இருந்தும் கூட, நாலாயிரம் தறிகளுக்கு எப்படி மின்சாரம் இணைப்புக் கொடுக்கப்பட்டது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினரை என்னுடைய சார்பில் வக்கீலாக வைத்துக்கொள்ளத் தவறிவிட்டது தான் காரணம் என்று நினைக்கிறேன். இதே கருத்தை ராஜ்ய சர்க்கார் வலியுறுத்தியது. அனுமதி பெறாத விசைத் தறிகளுக்கு மின்சாரம் கொடுக்கத் தேவையில்லை என்று நாங்கள் வாதாடினோம் ஆனால், கோர்ட்டிலே—உயர்நீதி மன்றத்திலே—"லைசென்ஸ் பெறுவதற்கும் மின்சாரம் வழங்குவதற்கும் சம்பந்தம் இல்லை, லைசென்ஸ் பெறாதவர்களுக்கு மின்சாரம் வழங்கக்கூடாது என்று சொல்வதற்குச் சர்க்காருக்கு அதிகாரம் இல்லை" என்று சொல்லி விட்டார்கள்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : கூட்டுறவு சங்கங்களுக்குப் பாதிப் பங்கு விசைத்தறிகள் கொடுத்தது போக, மீதமுள்ள பாதியை எந்த எந்த அளவிற்கு, யார் யாருக்கு விநியோகிப்பதாக அரசாங்கத்தின் கொள்கை இருக்கிறது ? முழு அளவிலே உபயோ கப்படுத்திக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இந்த அரசாங்கத் திற்கு இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எப்போதும் எனக்கு நம்பிக்கை உண்டு. அதைப்பற்றிக் கனம் உறுப்பினருக்கு எந்தச் சந்தேகமும் தேவை இல்லை. விசைத்தறிகளில் பாதி கூட்டுறவு சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. மறு பாதி இருப்பதை சாயப் பட்டரை வைத்திருப்பவர்கள், நூல் விநியோகம் செய்கிற வர்கள் போன்று கைத்தறியையொட்டிய இந்த விதமான தொழில் களில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்குக் கொடுக்கலாம் என்ற யோசனை இருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : மதுரை மாவட்டத்தில் 103 கைத்தறி சொஸைட்டிகள் இருந்தன. விசைத்தறிகளுக்கு லைசென்ஸ் கொடுப்பதன் காரணமாக அவற்றில் 33 சொஸைட்டிகள் கலைக்கப் பட்டு 70 சொஸைட்டிகளே பாக்கி இருக்கின்றன என்பதாவது அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்ததா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் உறுப்பினர் எழுதி அனுப்பினால் அதைக் கவனிக்கிறேன்.

Handloom Weavers' Co-operative Societies

* 392 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government are aware of the change that the Reserve Bank of India has effected in its scheme for affording credit facilities for the working capital requirements of Co-operative Handloom Societies and the consequent adverse repurcussion on the said societies as a result thereof?

[4th November 1966

THE HON. SRI R. VENKATARAMAN : The scheme has been introduced with effect from 1st April 1966. It is too early to decide whether the revised scheme has had adverse repercussion on the weavers' co-operative societies. Sir, I wish to add that after this answer was approved, I have received a number of representations that the credit policy of the Reserve Bank has adversely affected the handloom co-operatives.

திரு. வை. சங்கரன் : முன்னால் இருந்த இந்தத் திட்டத்தின் விதிமுறைகள் எவ்வாறு இருந்தன ? இப்பொழுது என்ன மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஸ்கீமே வேண்டும் என்று சொன்னால் அதற்குத் தனியாக மேசை மேல் அறிக்கை வைப்ப தற்குத் தயாராக இருக்கிறேன். குறிப்பாக ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றிக் கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, on the whole, the assistance and also the credit given to the handloom weavers' co-operative societies, as it stands, are being channelized through the co-operative institutions. Many of the societies that have availed of the loan assistance could not repay the loans on the ground that they could not keep stocks and there is also no cover for the money given by the co-operatives. So, may I know whether the Government will examine the entire position and see that the loan that is given to the handloom weavers' societies are repaid at least in a phased way?

THE HON. SRI R. VENKATARAMAN : There are two or three questions in this supplementary question. So far as the repayment of the loans taken by the weavers' societies to the Central Banks is concerned, the Government are taking adequate steps to see that the weavers' societies do repay them and if they do not repay them, they do not get credit facilities. So far as the credit facilities that are given by the State Bank to the Central Banks are concerned, the Reserve Bank has introduced a number of restrictions and they are being examined by the Government.

திரு. கரு. சீமைச்சாமி : கடன் வசதிகள் லூம் அடிப்படையில் கொடுக்கப்படும்போது, ஸில்க் லூம்களுக்குக் கடன் கொடுப்பதற்கு கைத்தறி போர்டு எதிர்ப்புத் தெரிவித்திருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைத்தான் நான் ஆரம் பத்திலேயே "மேற்கொண்டு ஒரு விவரம் கொடுக்க விரும்பு கிறேன்" என்று சொல்லி, "இந்தக் கேள்விக்குப் பதில் 'அப்ரூப்' ஆன பிறகு, பல ரெப்ரஸென்டேஷன்கள் சர்க்காருக்கு வந்திருக் கின்றன, அதில் இப்பொழுது இருக்கிற 'க்ரெடிட் பாலிஸி' கூட்டுறவு சங்கங்களுக்கு மிகவும் பாதகமாக இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள், அதை நாங்கள் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்" என்று தெரிவித்தேன்.

4th November 1966]

திரு. வை. சங்கரன்: புதிதாக விதித்துள்ள நிபந்தனைகள் என்னென்ன என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: It is a long list. As I have stated just now, if the hon. Member puts a particular question I would even place it on the table of the House. I cannot read a huge list.

*393 **கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம்:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம், அம்மாபேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கத்தில் நடைபெற்றுவரும் ஊழல்பற்றி அந்த சங்க உறுப்பினர்களிடமிருந்து புகார் ஏதேனும் அண்மையில் வந்திருக்கிறதா?

(இ) ஆமெனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) ஆம். 1966 ஏப்ரலில் புகார் ஒன்று வந்தது.

(இ) சேலம் (கைத்தறி) தனித் துணைப் பதிவாளர் விசாரணை ஒன்றை நடத்தினர். பெரும்பாலான குற்றச்சாட்டுகள் பொய்யானவை அல்லது அற்பமானவை என அறிவிக்கப்பட்டுள்ளது. வாலாயமான குறைபாடுகளை நீக்குமாறு தனித் துணைப் பதிவாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். மேற்படி கூட்டுறவுச் சங்கத்தின் அலுவல்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

திரு. இராம. அரங்கண்ணல்: சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் அற்பமானவையாகவோ அல்லது உண்மைக்கு மாறானவையாகவோ இருந்திருக்கலாம். ஆனல், வாலாயமான குறைபாடுகள் என்று சொல்லப்படுகிற அந்தக் குற்றச்சாட்டுகள் எந்த ரகத்தைச் சேர்ந்தவை? அற்பமானவையா அல்லது ஆதாரபூர்வமானவையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நடைமுறையில் சில குறைபாடுகள், தவறுகள் இருக்கலாம். விதிகளையொட்டி நடத்தவில்லை அல்லது காலத்திற்குள்ளாக ரிடர்ன் அனுப்பவில்லை என்பன போன்ற அந்த வாலாயமான குற்றச்சாட்டுகளைப் பொறுத்த வரையில், அவற்றை உடனடியாகத் திருத்தியனுப்ப வேண்டும் என்று சர்க்கார் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறது. அவையெல்லாம் உண்மையாக இருக்கிற காரணத்தினுல் தானே அவற்றை திருத்த வேண்டும் என்று சொல்லமுடியும்?

திரு. வி. எஸ். எஸ். மணி: கூட்டுறவு சங்கங்கள் மூலமாகக் கடன் கொடுப்பதற்குப் பதிலாக ஹாண்ட்லூம் ஃபினான்ஸ் கார்ப்பரேஷன் மூலமாகத்தான் நெசவாளிகளுக்கு கொடுக்கப்படும் என்று விதி ஏற்பட்டால் கூட்டுறவு சங்கத்தில் ஏற்படக்கூடிய . . .

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினருடைய இந்தக் கேள்வி மூலக் கேள்வியையொட்டி எழக்கூடிய கேள்வி அல்ல.